2012 ஏப்ரல் 16] [திரு. இரா. காமராஜ்]

மாண்புமிகு காங்கிரஸ் கட்சியினுடைய உறுப்பினர்கள்— சாதாரண ஏழையெளிய, பாமர மக்களுக்கு சாலையோர சங்கடத்தில் பாய்விரித்துப் படுத்த பின்னும் உறக்கம் வராத உழைப்பாளி இருக்கிறானே, அந்த உழைப்பாளிக்குத் தேவையான மண்ணெண்ணெய் கிடைக்கவில்லை என்கிற கோரிக்கையை வைக்கிறார்கள். மண்ணெண்ணெய் கிடைக்காததற்குக் காரணம் மத்திய அரசு என்று சொல்கிறோம். மத்திய அரசின் தொகுப்பிலிருந்துதான் மண்ணெண்ணெய் வழங்கவேண்டும், மண்ணெண்ணெய் கொடுக்கவேண்டும். அதை வாங்கித்தான் மாநில அரசு மக்களுக்கு விநியோகம் செய்யவேண்டும். அதைக் கொடுக்கவில்லை—அதைக் கேட்டு பெற்றுத் தரவேண்டுமென்று இந்த அவையின்மூலம் கேட்டுக்கொள்கிறேன். கடந்த தி.மு.க. ஆட்சியின் கடைசி காலத்திலே, ஏப்ரல் 2011 வரை 52,806 கிலோ லிட்டர் மண்ணெண்ணெய்தான் கொடுத்திருக்கிறார்கள் என்பதனையும் இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

(இ) தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் தாக்கப்படுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

***முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழக மீனவர்கள் குறிப்பாக, இராமேஸ்வரம் மீனவர்கள் தொடர்ச்சியாக இலங்கைக் கடற்படையினரால் தாக்குதலுக்கு இலக்காவது தொடர்கதையாக நடைபெற்று வருகிறது. அதிலும் குறிப்பாக, நம்முடைய இந்திய அரசின் சார்பாக அதிகாரிகளோ, அமைச்சர்களோ இலங்கைக்குச் சென்று திரும்பக்கூடிய வேளையில், மீண்டும் அந்தத் தாக்குதல் நடைபெறுகின்றது. எடுத்துக்காட்டாகச் சொல்லவேண்டுமென்றால், கடந்த அக்டோபர் மாதம் 8 ஆம் தேதி இந்தியாவினுடைய வெளியுறவுத் துறைச் செயலாளர் திரு. ரஞ்ஜன் மெத்தாய், நம்முடைய தமிழக . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கவனத்திற்குக் கொண்டு வாருங்கள். அந்தப் பிரச்சினையைக் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன் என்று சொல்லி உரையை முடியுங்கள். மாண்புமிகு அமைச்சர் விளக்கமாகச் சொல்வார்.

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: *தொடர்ந்து இலங்கையில் ஜனவரி மாதம் 13, 14 ஆம் தேதி கூட்டு நடவடிக்கைக் கூட்டம் நடைபெற்ற பிறகும்கூட, தொடர்ச்சியாக படகுகள் தாக்குதலுக்கு இலக்காவதும், மீனவர்கள் கைது செய்யப்படுவதும், தொடர் கதையாக நடைபெற்று வருகின்றது. இதை ஒரு தேசிய பிரச்சினையாக மத்திய அரசு கருதவில்லையென்ற நிலைதான் இருக்கின்றது. கடந்த நவம்பர் மாதம் 28 ஆம் தேதி 2011–இல் தங்கச்சிமடத்தைச் சேர்ந்த. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள்* day–to–day incident–*க்கு உள்ளே சென்றீர்கள் என்றால் அதற்கு என்னால் நேரம் கொடுக்கமுடியாது. இந்த மாதிரி தாக்குதல் நடைபெறுகிறது. அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்று மட்டும் அரசின் கவனத்திற்குக் கொண்டு வாருங்கள்.*

முற்பகல் 11–20

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: **உண்மைக்கு மாறாக வழக்குப் போட்டு, 5 மீனவர்கள் கடந்த நவம்பர் மாதம் 28 ஆம் தேதியன்று கைது செய்யப்பட்டு, 5 மாதங்களாக இலங்கைச் சிறையிலே இருக்கின்றார்கள். அவர்களை விடுதலை செய்வதற்காகத் தமிழக அரசு முயற்சி செய்கின்றது. அவர்களுடைய குடும்பத்தினருக்கும் மாதாந்திர உதவிகளை அளிக்க வேண்டும். இந்தப் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு தமிழக அரசு என்ன செய்யப் போகின்றது என்பதை அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டுவந்து அமருகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், தங்களுடைய உரையில் குறிப்பிட்ட * வழக்கு என்பதற்குப் பதிலாக 'உண்மைக்கு மாறான வழக்கு' என்று பதிவு செய்யப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார் அவர்கள். நீங்கள் எந்தப் பிரச்சினையைப் பற்றி பேசப் போகிறீர்கள்? மீனவர் பிரச்சினையைப் பற்றி பேசப் போகிறீர்களா? சுருக்கமாக உரையை முடியுங்கள்.*

---

* *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.*

2012 ஏப்ரல் 16]

திரு. அ. கணேஷ்குமார்: ஆம். மீனவர் பிரச்சினை பற்றி பேசப் போகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 2–4–2012 அன்று இராமேஸ்வரம் மீனவர்கள் நடுக்கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்தபொழுது அங்கே வந்த இலங்கைக் கடற்படையினர் அவர்களை விரட்டியடித்து, வலையைப் பறித்துக்கொண்டதோடு மட்டுமல்லாமல், கொடூரமான முறையில் கற்களைக் கொண்டு எறிந்திருக்கிறார்கள். அதிலே இரண்டு மீனவர்கள் காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற பிறகு, இப்பொழுதுதான் வீடு திரும்பியிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல; இதுபோன்ற பல சம்பவங்கள். குறிப்பாக, நாகை மாவட்ட மீனவர்களும் இதுபோன்ற துன்பங்களை அனுபவித்துக்கொண்டு வருகிறார்கள்.

கேரள மீனவர்கள்மீது அக்கறை காட்டும் நடுவண் அரசு, தமிழக மீனவர்கள்மீது எந்தவித அக்கறையும் காட்டுவதில்லை என்பதுதான் உண்மை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், அவையின் கவனத்திற்குக் கொண்டு வாருங்கள்.

திரு. அ. கணேஷ்குமார்: கேரள மீனவர்கள் 2 பேர் சுட்டுக் கொல்லப்பட்டபொழுது நடுவணரசு காட்டிய அக்கறை 500–க்கும் மேற்பட்ட தமிழக மீனவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டபொழுது, எந்தவித அக்கறையும் காட்டவில்லை என்பதை இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இதுமட்டுமல்ல . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அத்துடன் தங்களது உரையை முடித்துவிடுங்கள். திரு. அ. கணேஷ்குமார், உட்காருங்கள். மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 3–4–2012 ஆம் நாளன்று இராமேஸ்வரம் பகுதியிலிருந்து கடலில் மீன்பிடிக்கச் சென்ற தமிழக மீனவர்கள்மீது இலங்கைக் கடற்படையினர் கற்களை வீசித் தாக்கி விரட்டியடித்துள்ளதாக ஊடகங்களில் செய்தி வெளியானது. இதனைத் தொடர்ந்து மேற்கொண்ட விசாரணையில் கடந்த 2–4–2012 ஆம் தேதியன்று இராமேஸ்வரம் பகுதியிலிருந்து 504 மீன்பிடி விசைப் படகுகள் கடலில் மீன் பிடிக்கச் சென்றுள்ளன.

மீன் பிடிப்பினை முடித்துக்கொண்டு 3–4–2012 ஆம் தேதியன்று 504 மீன்பிடி விசைப் படகுகளும் பத்திரமாகக் கரை திரும்பியுள்ளன. தவிரவும், ஊடகங்களில் வெளியான செய்தி தொடர்பாக, கடலுக்கு மீன்பிடிக்கச் சென்று திரும்பிய மீனவர்களிடம் விசாரணை மேற்கொண்டபோது, மேற்குறித்த இலங்கைக் கடற்படையினரால் கல்வீச்சு சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றும் தெரிவித்துள்ளனர். மேலும், இராமேஸ்வரம் பகுதி கியூ பிராஞ்ச் காவல் துறையினர் மற்றும் பிற பாதுகாப்புத் துறையினர் விசாரணையில், மேற்கண்ட கல்வீச்சு சம்பவம் ஏதும் நடைபெறவில்லை எனத் தெரிய வந்துள்ளது. எனவே, மேற்கண்ட சம்பவங்கள் நடைபெற்றதாக ஊடகங்களில் வெளிவந்த தகவல் உண்மைக்கு முரணாக உள்ளது என்பது விசாரணைமூலம் தெரிய வருகிறது. இருப்பினும், இந்நிகழ்வு குறித்து தகவல்கள் மத்திய அரசின் கவனத்திற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் கொண்டு செல்லப்பட்டுள்ளது. இராமேஸ்வரம் மீனவர்கள், தங்களது மீன்பிடித் தொழிலைத் தொடர்ந்து செய்துகொண்டு வருகின்றார்கள். மேலும், தமிழக மீனவர்கள்மீது இலங்கைத் கடற்படையினர் மற்றும் இலங்கை மீனவர்களால் மேற்கொள்ளப்படும் துன்புறுத்தல் நிகழ்வுகள் நடைபெறுவதைத் தடுத்து நிறுத்திட, உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மாண்புமிகு இந்திய பிரதமரை, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள் பதவியேற்ற 10 மாதங்களில், 6 முறை வலியுறுத்தியுள்ளார்கள் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

கேரளக் கடற்பகுதியில் நடந்த துப்பாக்கிச் சூடு சம்பவத்தில் பலியான ஒருவர் கேரள மீனவர்; இன்னொருவர் தூத்தூர் பகுதியைச் சேர்ந்த குளச்சல் மீனவர். ஆகவே, இரண்டு பேரும் கேரளத்தைச் சார்ந்தவர்கள் என்பதில்லை. எவ்வளவோ, சம்பவங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. ஆனாலும், மத்திய அரசுக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் இதுவரை எந்த முதல்வரும் செய்யாதவிதமாக, 10 மாதங்களில் 6 முறைகள் தொடர்ந்து வலியுறுத்தப்பட்டிருக்கிறது. ஆனால், மத்திய அரசு பாராமுகமாக, ஏனோதானோவென்று தமிழக முதல்வரைத்தான் பார்த்துக்கொண்டிருக்கிறதே தவிர, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எடுக்கிற நடவடிக்கைகளை,

2012 ஏப்ரல் 16] [திரு. கே.ஏ. ஜெயபால்]

உண்மையாக மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்களும் பாராட்ட வேண்டும். அந்த அளவுக்கு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நடவடிக்கை எடுத்துள்ளார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(ஈ) ஒட்டப்பிடாரம் தொகுதி, புலிப்பாய்ஞ்சான்குளம், வைகுண்டபதி பெருமாள் கோயிலுக்குச் சொந்தமான நிலத்தை ஏலம் விடுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள். நீங்கள் என்ன பிரச்சினையைப் பற்றிப் பேசப் போகிறீர்கள்? What is your issue?

***டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் தொகுதிக்குட்பட்ட புலிப்பாய்ஞ்சான்குளத்தில், வைகுண்டபதி பெருமாள் கோயிலுக்குச் சொந்தமான 247.62 ஏக்கர் நிலத்தில், இப்பொழுது 55 ஏக்கர் நிலத்தை ஏலம் விடுவதுதான் நான் எழுப்ப விரும்பும் கவன ஈர்ப்பாகும். இறை பக்தி நிறைந்த நிலச்சுவான்தார் ஒருவர் தூத்துக்குடி, வைகுண்டபதி பெருமாள் கோயிலுக்கு 247.62 ஏக்கர் நிலத்தைத் தானமாக வழங்குகிறார்கள். அந்த நிலம் சில தனியாருக்குக் குத்தகைக்கு விவசாயப் பயன்பாட்டிற்காகக் கொடுக்கப்படுகிறது. நாளடைவில் அனுபவ உரிமை என்ற வகையில் அந்த 247.62 ஏக்கர் நிலத்தையும் குத்தகைதாரர்கள் சொந்தம் கொண்டாடுகிறார்கள். ஆனால், இந்த நிலத்தை இந்து சமய மற்றும் அறநிலையத் துறை . . .

முற்பகல் 11—25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நேரம் 11—25. மானியக் கோரிக்கைக்குப் போக வேண்டும். டாக்டர் க. கிருஷ்ணசாமி, நீங்கள் அரசின் கவனத்தை ஈர்க்கிறேன் என்று சொல்லி முடியுங்கள். தயவுசெய்து உட்காருங்கள்.

டாக்டர் க. கிருஷ்ணசாமி: இந்து சமய மற்றும் அறநிலையத் துறை இதுகுறித்து நீதிமன்றத்திலே முறையாக வாதாடுவதற்குத் தவறியதன் விளைவாக இப்பொழுது 192.62 ஏக்கர் நிலம் தனியார் ஒருவருக்குச் சென்றுவிட்டது. வெறும் 55 ஏக்கர் நிலம் மட்டுமே வைகுண்டபதி கோயிலுக்கு வந்திருக்கிறது.